International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 1 Jan - Mar 2026

Published on 14, Jan - Mar 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# வாய்மொழி இலக்கியங்களும் வாழ்க்கை வட்டச் சடங்குகளும் - செந்துறை வட்டம்

**செ. மோகன்,** முனைவர் பட்ட ஆய்வாளர்
நாட்டுப்புறவியல் துறை தமிழ்ப் பல்கலைக்கழகம்- தஞ்சாவூர்-10

**முனைவர் சீமான். இளையராஜா**
உதவி பேராசிரியர் நாட்டுப்புறவியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர் -10

**ஆய்வுச் சுருக்கம்**

எழுத்து இலக்கியங்கள் தோன்றுவதற்கு அடிப்படையாக அமைவது வாய்மொழி இலக்கியங்கள் ஆகும். எழுத்து மரபு காலம் தோறும் வளர்ச்சியையும் மாற்றங்களையும் பெறுகிறது. வாய்மொழி இலக்கியங்கள் எழுத்து இலக்கியங்களோடு இணைந்து அவற்றை செழுமைப்படுத்துகின்றன. எழுத்திலக்கியங்களின் தாய் வாய்மொழி இலக்கியங்கள் ஆகும். தொடக்க காலத்தில் மனிதனால் படைக்கப்பட்ட இலக்கியங்கள் ஓலைச்சுவடிகளில் பதிவு பெறுவதற்கு முன்பே ஒவ்வொருவருடைய உள்ளத்திலிருந்து வாய்மொழியாக வெளிப்பட்ட இலக்கியம்தான் வாய்மொழி இலக்கியம். மக்களிடையே வழங்கப்பட்டு வந்த கதைகள், காப்பியங்கள், புராணங்கள், நாட்டுப்புற பாடல்கள் பின் நாட்களில் புது வடிவம் பெற தொடங்கியது. அத்தகைய இலக்கியங்கள் அம்மானையாகவும், வரிப்பாடலாகவும் , ஊசலாகவும், குறவஞ்சியாகவும், பள்ளு இலக்கியங்களாகவும் பண்டைய காலம் தொட்டு இன்று வரை தொடர்கிறது. அறிவியல் கண்டுபிடிப்பான அச்சு இயந்திரத்தால் இத்தகைய வாய்மொழி இலக்கியங்கள் எழுத்து இலக்கியங்களாக மாறியது. வாய்மொழி இலக்கியங்களில் தமிழர் வரலாறு, தமிழர் பண்பாடு, தமிழர் கலாச்சாரம், தமிழர் நாகரீகம் அனைத்தையும் நினைவு கூற தக்க வகையில் வாய்மொழி இலக்கியங்கள் அமைந்துள்ளது. வாய்மொழி இலக்கியத்திற்கு படைப்பாளன் இல்லை. மரபு ரீதியாக பாரம்பரியமாக பயிற்றுவிக்கப்பட்டு அனுபவத்தின் அடிப்படையில் பாடப்படுவது. மனித இனம் தோன்றிய காலம் முதல் சடங்குகளும் தோன்றுவிட்டன. மனித இனத்தின் பழக்க வழக்கங்களின் வெளிப்பாடு சடங்குகள். அத்தகைய சடங்குகள்செந்துறை பகுதியில் எவ்வாறு நிகழ்த்தப்படுகிறது என்பதை பற்றியும்,வாய்மொழி இலக்கியங்கள் சார்ந்த செய்திகள் பற்றியும் விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

**ஆய்வு நோக்கம்**

அரியலூர் மாவட்டம், செந்துறை வட்டத்தை பூர்வீகமாகக் கொண்ட நாட்டுப்புற மக்கள் தங்களின் வாழ்வியலோடு எந்தெந்த நிலைகளில் வாய்மொழி இலக்கியங்களை பயன்படுத்துகின்றனர் என்றும் இப்பகுதியில் வாழ்கின்ற மக்கள் செய்கின்ற சடங்குகள் பற்றியும் எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

**முதன்மைச் சொற்கள்**

வாய்மொழி இலக்கிய வரலாறு -செந்துறை வட்ட மக்களின் வழக்காறுகள்-சிறார் நாட்டார் வழக்காற்றியல்-செந்துறை பகுதி மக்களின் வாழ்க்கை வட்ட சடங்குகள் மற்றும் நம்பிக்கைகள் - உளவியல் நோக்கில் வாய்மொழி இலக்கியங்கள்,குலதெய்வ வழிபாடு, தற்காலத்தில் சடங்குகள் நடைபெறும் விதம்.

**முன்னுரை**

வாழ்க்கையை பிரதிபலிக்கும் கண்ணாடி இலக்கியம் என்பர். வாழ்க்கையை வழிமொழிந்து சொல்வதுதான் வாய்மொழி இலக்கியம். வாய்மொழி இலக்கியங்கள் தான் தனி மனிதனின்

வாழ்க்கை நிலையைச் சுத்திகரிக்கும் பணியை செய்து வருகிறது. மனித வாழ்க்கையில் ஏற்படுகின்ற இன்பம், துன்பம் உள்ளக் குமுறல்களை எண்ணங்களின் கோர்வையாக்கி, கோர்வைகளை கருத்து குவியல் ஆக்கி பாடலாக விளக்குகின்ற கருவியே வாய்மொழி இலக்கியங் கள் ஆகும். செந்துறை வட்டப் பகுதியில் தாலாட்டு, விளையாட்டு பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள், ஒப்பாரி பாடல்கள் என பலவகை யான வாய்மொழி இலக்கியங்கள் இன்றளவும் புழக்கத்தில் காணப்படுகின்றன. இதையே தொல்காப்பியர்,

**பாட்டு உரை நூல் வாய்மொழி பிசியே**

**அங்கதம் முது சொல்லோடு அவ்வே நிலத்தும்**

என்று ஏழு வகையான யாப்புகளைக் குறிப்பிடு கின்றார். செந்துறை வட்டத்தில் தாலாட்டுப் பாட்டினைத் தொடங்கும் பொழுது பாடலில் பொருள் இல்லா ஒலி தொடர்களாகிய ஆராரோ ஆரிராரோ, லுலுலாயி, லௌ லௌளாயி போன்ற சொற்கள் வழக்கத்தில் அதிகமாக காணப் படுகின்றன. சிறார் வழக்காற்றியலில் சிறுவர்கள் தங்களுக்குள் விளையாடும் பொழுது பொருள் பொதிந்த சொற்களைக் கூறியே விளையாடுகின்ற னர். பழமொழிகள், விடுகதைகள் போன்றவை செந்துறை வட்ட மக்களின் வாழ்க்கை அனுபவத்திலிருந்து விளைந்தமுத்துக்கள் ஆகும். ஒப்பாரிபாடல்களில் முக்காலத்திற்கும் பொருந்தக் கூடிய உளவியல் சிந்தனைகளை உள்ளடக்கிய கருத்துக்களைக் கொண்டே பாடுவர்.

**இயற்கையிடமும் மரணத்திற்குப் பின் வரும் நிலையிடமும் மனிதன் கொண்ட அச்சமே வழிபாட்டிற்கு அடிப்படை காரணம்** என்கிறார் சிக்மண்ட் பிராய்ட் -சு.சக்திவேல் நாட்டுப்புறவியல் ஆய்வு பக்-224

மனித இனக்குழுக்கள் தோன்றிய காலத்தில் ஏற்பட்ட அச்ச உணர்வு, பகை உணர்வு, வாழ்க்கையில் ஏற்படக்கூடிய தடுமாற்றம், முன்னேற்றம் என அனைத்திற்கும் செயல் வடிவம் கொடுக்கும் வகையில் உருவானதே சடங்குகள் ஆகும். சடங்குகள் மனிதர்களின் வாழ்க்கை முறையை நெறிப்படுத்துவதற்காகவும், வலுவூட்டுவதற்காகவும், நம்பிக்கை ஏற்படுத்து வதற்காகவும் உருவாக்கப்பட்டன. அந்த வகை யில் செந்துறை வட்டப் பகுதியில் பிறப்பு முதல் இறப்பு வரை பல வகையான சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன. '

**'சடங்குகள் நிகழ்த்தப்படும் காலம், இடம், சூழல், தேவை, நோக்கம் போன்ற காரணிகளைக் கொண்டு அவற்றின் தன்மைகள் வேறு படுகின்றன** என்கிறார் பக்தவச்சல பாரதி.

**வாய்மொழி இலக்கியங்கள் சார்ந்த இலக்கிய பதிவுகள்**

தமிழ் இலக்கியங்களில் பல நூல்களில் வாய்மொழி இலக்கியங்கள் பற்றிய பதிவுகள் காணப்படுகின்றன.

எடுத்துக்காட்டாக,

**நன்று செய் மருங்கில் தீதில் என்னும்**

**தொன்றுபடு பழமொழி** அகநானூறு (101) கூறியுள்ளது.

**வெற்றிவேந்தன் விண்ணகம் அடைந்தபின்**

**கற்றோர் உரைப்பது கையறு நிலையே**

என்று பன்னிரு பாட்டியல் ஒப்பாரிப் பாடலைக் கூறுகிறது.

**மாணிக்கம் கட்டி வைரம் இடைகட்டி**

**ஆணி பொன்னால் செய்த வண்ணச்சிறு தொட்டில்**

**பேணி உனக்கு பிரமன் விடு தந்தான்**

**மாணிக் குரலனே தாலேலோ**

**ஐவயமளந்தானே தாலேலோ**

என்று பிள்ளைத்தமிழில் தாளப்பருவம் பாடுகிறது.

வாய்மொழி இலக்கியமான பழமொழிக்கு, திருத்தக்க தேவர்

**நோற்றிலர் மகளிர் என்பார் நோங்கண்டீர் தோள்களென்பார்**

கூற்றத்தை கொம்மை கொட்டி குலத்தோடு முடியும் என்பார்

சீவக சிந்தாமணியில் (1109) சீவகன் சிறைப்பட்ட போது உள்ளம் உடைந்த பெண்டிர் தங்கள் துயரத்தை வெளிப்படுத்துவதை ஓவியமாகத் தர இப்பழமொழி பயன்படுகிறது.

சடங்குகள் என்பது அனைத்துச் சமுதாயத்திலும் நிரம்பிக் காணப்படுகிறது. செந்துறைப் பகுதியில் பல வகையான சடங்குகள் இன்றளவும் நிகழ்த்தப்பட்டு வருகின்றது.

'சடங்குகள் எல்லாம் அந்தந்த பண்பாட்டு சமூகங்களுக்கு பொது என்றாலும், ஆணுக்குரிய வையாகவும், பெண்ணுக்குரியவையாகும் வேறுபடு கின்றன. குறிப்பாக சங்க இலக்கியத்தில் இந்த வேறுபாட்டை இனங்காணவியலும், ஆணுக்கு ஆள்பவனுக்கு உரிய சடங்குகளும், பெண் களுக்கு மனையுறை மற்றும் பாலியல் சார்ந்த சடங்குகளும் இன்றளவும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.'-, (ராஜகௌதமன் பாட்டும் தொகையும் தொல்காப்பியமும் தமிழ் உருவாக்கமும் பக்கம் எண்- 79)

**செந்துறை வட்டார சில நாட்டுப்புறப் பாடல்கள்**

செந்துறை வட்டாரப் பகுதியில் தாலாட்டு பாடல்கள் கிராமங்களில் பரவி காணப்படுகின்றது.

**வாசலிலே வாழ மரம்**

**உன் வம்சமே ராஜகுலம்**

**ராஜகுலம் பெற்றெடுத்த**

**மணியே யாரடிச்சா**

**அரைஞான் கயிறா நீ- என் செல்வமே**

**ஆராரோ ஆரிராரோ ஆராரோ ஆரிரரோ**

தாலாட்டுப் பாடலில் தன் குலப்பெருமையை பாடுவதாகச் செந்துறைப் பகுதியில் தாலாட்டுப்

பாடல் நிலவுகிறது.

**செந்துறைப் பகுதியில் பாடப்படும் ஒப்பாரி பாடல்**

**உடுத்தும் கண்டாங்கி ஏஞ்சாமி**
**உனக்கு வாச்ச கன்னிக்கு**
**உள்ளாத தங்க நிறம்**
**உடுத்தி புறப்பட்டா ஏஞ்சாமி**
**நீங்க இல்லாத சீமையிலே இன்னைக்கு -என்ன**
**ஊரார் ஏசுவாக**
**கட்டும் கருப்பு சேலை ஏஞ்சாமி**
**கட்டிப் புறப்பட்டா**
**நீங்க இல்லாத சீமையிலே இன்னைக்கு -என்ன**
**கண்டவங்க ஏசுவாங்க** என்று எதிர்காலத்தில் சமுதாயம் தன்னை எவ்வாறு பழிக்கும் என்பதை உளவியல் சிந்தனையோடு ஒப்பாரியாகப் பாடுகிறாள்.

இன்றைய நவீன உலகத்தில் கிராமங்களில் மட்டுமே சிறுவர்கள் குழுக்களாகக் கூடி விளையாடுவதை இன்றளவும் காண முடிகிறது. அவ்வாறு விளையாடுகையில் வேளாண்மை செய்து விளைவித்த தானியங்களைச் சாலைகளில் உலர்த்தப்படும் பொழுது அவற்றை உண்ண வரும் பறவைக் கூட்டங்களை விரட்டுவதற்காக செந்துறை வட்டாரப்பகுதியில் உள்ள சிறுவர்கள்

**ரோட்டுல சுண்டக்கா**

**ஓடிவா ராமாக்கா**

**பறவைகளை துரத்தி விட்டு**

**பறந்துவா ராமாக்கா '**- என்று பாடி மகிழ்வர்.

**செந்துறை வட்டாரச் சடங்குகள்**

செந்துறை வட்டத்தில் செந்துறையைத் தவிர மற்ற ஊர்கள் அனைத்தும் கிராமங்களாக காணப்படுகின்றன. அத்தகைய கிராமங்களில் பிறப்பு முதல் இறப்பு வரை பல வகையான சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன. பிறப்பு சடங்கு என எடுத்துக் கொண்டால், குழந்தைக்கு புண்ணியாசனம் செய்தல், பெயர் வைத்தல், சேனைத் தொடுதல், தொட்டிலிடுதல், பிறந்தநாள் விழா, காது குத்தல் போன்றவை ஆகும். பூப்பு சடங்கு என எடுத்துக் கொண்டால் குச்சி கட்டுதல், புண்ணிய தானம் செய்தல், மஞ்சள் நீராட்டு விழா, ஊர்வலம் சுற்றுதல் போன்ற சடங்குகள் நடத்தப்படுகின்றன. திருமணச் சடங்குஎன எடுத்துக் கொண்டால் சாதகப் பொருத்தம், இரு விட்டாரும் கை நனைத்தல், தேதி வைத்தல், முகூர்த்தக்கால் நடுதல், நலங்கு வைத்தல், பந்தல் அமைத்தல், முளைப்பாரி வளர்த்தல், மணமகள் அழைப்பு, தாய்மாமன் ஊர்வலம், தாலி கட்டுதல், பால் பழம் கொடுத்தல், குலதெய்வத்திற்குப் பொங்கல் வைத்து வழிபாடு, சாந்தி முகூர்த்தம் நடத்துதல் எனப் பல வகையான சடங்குகள் செந்துறை பகுதியில் நிகழ்த்தப்படுகிறது. திருமணம் முடிந்த பிறகு வளைகாப்பு நிகழ்வு வெகு விமர்சையாகக் கொண்டாடப்படுகிறது. இறப்புச் சடங்கில் வழி விடுதல், வாய்க்கரிசி எடுத்தல், பிறந்தவீட்டுக் கோடி துணி போடுதல், சுமங்கலி தானம் பெறுதல், நீர் மாலை எடுத்தல், பாடை மாற்றுதல், இடுகாட்டில் வாய்க்கரிசி போடுதல், குடம் உடைத்தல், புதைத்தல் அல்லது கொள்ளி வைத்தல், அடுத்த நாள் பாலூற்றுதல் என இறப்பின் போது நிகழ்த்தப்படுகின்ற சடங்குகள் ஆகும். இறந்த பின்பு மறுநாள் தலைக்குத் துண்டு கட்டுதல், எட்டாம் நாள் துக்கம், 16ஆம் நாள் கருமகாரியம், 30ஆம் நாள் துக்கம் பலவகையான வாழ்க்கை வட்டச் சடங்குகள் இன்றளவும் நிறைந்து காணப்படுகின்றது.

பண்டைய கால முதல் இக்காலம் வரை எந்த ஒரு சுப நிகழ்வுக்கும் சுமங்கலியாக இருக்கின்ற பிள்ளைகளைப் பெற்ற பெண்களையே முன் நிறுத்திச் சடங்குகள் செய்வதற்கு அனுமதிக்கப் பட்டு வருகிறது. இதையே எட்டுத்தொகை நூலான அகநானூறில்

**இம்மை உலகத்திசையொடும் விளங்கி**
**மறுமை உலகமும் மருவின்றி எழுதுப**
**செறுநரும் விழையும் செயிர்திர் காட்சிச்**
**சிறுவர் பயந்த செம்மலோர்** -அகநானூறு பாடல்-6 வழி மூலம் அறிய முடிகிறது.

பூப்பெய்தல் பற்றித் தொல்காப்பிய நூற்பாவில்,

**பூப்பின் புறப்பாடு ஈறாறு நாளும்**

**நீத்தக்கன் றுறையார் என்மனார் புலவர்**

**பரத்தையின் பிரிந்த காலையான** (தொல்-1133)

என்ற நூற்பாவானது தலைவி பூப்பெய்திய நிலையில் 12 நாட்கள் கழித்து தலைவன் தலைவியை சேரும் நாள் பற்றி குறிப்பிடப் படுகிறது.

பெண்கள் ஒப்பாரி இடும்பொழுது மார்பில் அறைந்து அழுவதை பற்றியும், வளையல்கள் நீக்கப்படுவதைப் பற்றியும்

**ஊழினுருப்ப வெறுக்கிய மகளிர்**

**வாழைப் பூவின் வளைமுறி சிதற** புறம்.237(10-11)

பற்றி பாடுகிறது.

பெண்களின் உள்ளத்தில் புதைந்து கிடக்கும் குமுறல்களை வெளிப்படுத்தும் ஒரு கருவியாக அமைவது ஒப்பாரி என சு.ஞானசௌந்தரி கூறுகிறார். இறந்தாரை எண்ணி அழுவோர் இனி அவருக்கு ஒப்பார் இல்லை என்ற நிலையிலி ருந்து அழுது புலம்புவது ஒப்பாரி பாடல் ஆகும்.

**தங்கத் தலைகாணி**
**தாய்மாமன் கையெழுத்து**
**தாய்மாமன் இல்லாத**
**தாலி தகராறு**
**தகுந்த இடம் கோளாறு**
**பொன்னி தலைகாணி**
**பொன்மாமன் கையெழுத்து**
**பொன்மாமன் இல்லாத**
**பூவும் தகராறு**
**புகுந்த இடம் கோளாறு**

என்று கணவனை இழந்த பெண் தனது

உளவியல் மனநிலையை ஒப்பாரியாக பாடுகிறாள். இவ்வாறாகப் பல வகையான சடங்குகள் சங்க இலக்கியங்களிலும் காணப்படுகிறது. அது இன்றைய அளவும் செந்துறை வட்டப்பகுதியில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

**சடங்குகளால் ஏற்படும் நம்பிக்கைகள்**

ஆதிகால மனிதன் வேட்டையாடு செல்வதற்கு முன் சடங்குகள் நிகழ்த்தப்பட்டன என்பதற்குச் சான்றுகள் கிடைத்துள்ளன. இசை, ஆடல், பாடல், மொழி போலவே சடங்குகளும் பழங்குடி மனிதர்களின் பரிணாம வளர்ச்சியில் பெரும் பங்கு ஆட்சி உள்ளது. சடங்குகள் என்பவை நம்பிக்கை அடிப்படையில் மக்களால் தொடர்ந்து கடைபிடிக்கப்படுகின்ற புனித செயல்கள். மக்களால் மக்களுக்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு வரமுறையே சடங்குகள் ஆகும். 'நாட்டுப் புறவியல் என்பது நம்பிக்கைகள் பழக்கவழக்கங்கள் ஆகியவற்றால் பாதுகாக்கப்படும் ஒரு குறிப்பிட்ட மக்களின் பண்பாடாகும் 'Maria Leach (Mythology and Legend. பக்-399). நம்பிக்கைகளும் இலட்சியங்களும் மிகத்தெளிவாக வெளிப்படுத்தும் பண்பாட்டுக் கூறுகளில் ஒன்றான சடங்கு நாட்டுப்புறவியலில் முக்கிய இடம் வகிக்கின்றது. நம்பிக்கை பண்டைய தமிழரிடையேயும் இன்றும் தமிழகத்தில் நிலவி வருவதை அறியலாம். இதனைப் புறநானூறு நமக்கு 'அஞ்சுவரு குராஅல் குரலுந் தூற்றும்'- (புறம் 280) என்று காட்டுகிறது.

காகம் கத்தினால் விருந்தினர் வருவர் என்பதை அக்கால முதல் இக்காலம் வரை தமிழரிடையே நிலவி காணப்படுகிறது. இதனைக் குறுந்தொகை,

**மறுவில் தூவிச் சிறுகருங் காக்கை**

**அன்புடை மரபினின் கிளையோ டரா**

(குறுந்தொகை -391) கூறப்பட்டுள்ளது.

**முப்பூசை வழிபாடு**

செந்துறை வட்டார மக்கள் தங்களின் நீண்ட கால வேண்டுதலைக் குலசாமி வழிபாடு நிறைவேற்றினால் அதற்கு நன்றிக் கடனாக முப்பூசை செய்து வழிபடும் வழக்கம் காணப்படுகிறது. முப்புசையில் தங்களது குலதெய்வத்திற்கு பூத்தாடை, மாலை, வேல் ஆயுதம், மணி போன்றவற்றை கொடையாக அளித்து ஆடு, சேவல், பன்றி போன்ற விலங்கினங்களை அவ் இறைச்சியைத் தங்களது உறவினர்களுக்கு விருந்தளித்து நேர்த்திக் கடனைச் செலுத்தும் பழக்கம் அனைத்துக் கிராமங்களிலும் காணப் படுகிறது.

செந்துறை வட்டார கிராமங்களில் மாசி மாதம் மகம் முடிவுற்று வருகின்ற வெள்ளிக்கிழமைகளில் ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு கிராமங்களில் தொடர்ச்சியாக தீமிதி திருவிழா நடைபெற்று வருகிறது. அவ்வாறு நடைபெறும் தீமிதி திருவிழாக்கள் மூலம் தங்களது கிராமம் நோய் நொடியின்றியும், வேளாண்மையில் சிறந்து விளங்கும் என்பதும் இவ்வட்டார மக்களின் பெருத்த நம்பிக்கையாகும்.

**தற்காலத்தில் சடங்குகள் நடைபெறும் விதம்**

பழங்காலம் தொட்டே கிராமங்களில் சடங்குகள் வெகு சிறப்பாக நடைபெற்று வருகிறது. ஆனால் இன்றைய நவீன உலகத்தில் சடங்குகள் என்பவை தன்னிடம் உள்ள பொருட்செல்வத்தின் மதிப்பை காட்டுபவையாகவும், தாங்கள் சமுதாயத்தில் எந்த நிலையில் உள்ளோம் என்பதை வெளிப்படுத்துவதற்காகவும் இன்றைய சடங்குகள் நிகழ்த்தப் பெறுகின்றன. அதிலும் பெரும்பாலான சடங்குகள் நகர்ப்புறங்களில் அழிந்து, மீதமுள்ள சடங்குகளை தாங்கிப் பிடிக்கும் தூண்களாக கிராமங்கள் அமைந்து உள்ளது.

**முடிவுரை**

வாய்மொழி இலக்கியங்களும், சடங்குகளும் மனித நடத்தைகள், செயல்பாடுகள்மற்றும் நிகழ்ச்சிகளையும் அடிப்படையாகக் கொண்டு உருவாக்கம் பெறுவனவாகின்றன. மனிதனின் எண்ணங்களை வலுவூட்டுபவையாக வாய்மொழி இலக்கியங்களும், மனிதர்களுக்கு நம்பிக்கை ஊட்டுபவையாக சடங்குகளும் அமைந்திருக்கின்றன என்பதை மறுப்பதற்கு இல்லை.

செந்துறை வட்டார மக்களின் பழக்கவழக்கங்கள், செயல்கள் எனது ஒவ்வொன்றுக்கும் காரண காரிய தொடர்பு உள்ளது என்பதை கட்டுரையின் மூலம் அறியமுடிகிறது. வாய்மொழி இலக்கியங்கள் மூலம் அறிவியல் எண்ணங்கள் உளவியல் உண்மைகள், சமூகச் சிந்தனைகள், மொழியில் கூறுகள், வரலாற்று குறிப்புகள் போன்றவற்றை அறியமுடிகிறது. வாய்மொழி இலக்கியங்களும், வாழ்க்கை வட்டச் சடங்குகளும் ஒன்றை ஒன்று பிரிக்க முடியாத வகையில் பின்னிப்பிணைந்து காணப்படுகிறது என்பதை செந்துறை வட்ட மக்களின் வாழ்வியலை ஆய்வு செய்கையில் நமக்குத் தெள்ளத் தெளிவாகப் புலப்படுகிறது.

**பார்வை நூல்கள்**

1. தொல்காப்பியம்- இளம்பூரணார் உரை, சாரதா பதிப்பகம், சென்னை -14, பதிப்பாண்டு -2015
2. நாட்டுப்புறவியல் ஆய்வு, டாக்டர் சு.சக்திவேல், மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை, சென்னை -108, பதிப்பாண்டு -2019
3. புறநானூறு, புலியூர் கேசிகன், சாரதா பதிப்பகம் சென்னை -14, பதிப்பாண்டு -2018
4. நாட்டுப்புறவியல், பேரா. சு. சண்முகசுந்தரம் காவியா பதிப்பகம், சென்னை 24, பதிப்பாண்டு - 2024
5. ராஜ கௌதமன் பாட்டும் தொகையும், தொல்காப்பியமும் தமிழ் சமூக உருவாக்கமும், பக்கம்- 79
6. அகநானூறு, நா. மு. வேங்கடசாமி நாட்டார், சைவ சித்தாந்தக் கழகம் சென்னை -18, பதிப்பாண்டு -2009